352

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

கீர்த்தனமஞ்சரி.

இஃது

நாகூர் ஸ்ரீமத்

யூ. சின்னத்தம்பி மரைக்காயர் அவர்கள் குமாரரும்

செந்தமிழ்பாநு, திருமயிலை

ஸ்ரீமான் பா. முனிஸ்வாமிப்பாவலர் அவர்கள்

மாணாக்கருமாகிய,

யூ. சி. பக்கீர்மஸ்தான் அவர்களால்

இயற்றப்பட்டது.

நாகூர், ஸ்ரீ-ல-ஸ்ரீ

சி, வாஞ்சூர் மதார்சாயபு அவர்கள் குமாரரும்

பினங்கு B. I. கம்பனி ஸ்டீவிடோரும்,

மிராசிதாரும் கனதன வியாபாரியும்,

தயாளகுண சம்பன்னருமாகிய

ஸ்ரீமத். சிந்தாமதாரசாகிபு அவர்கள்

தனோபகாரத்தினால்

நாகூர், வா. குலாம்காதிறு நாவலர் மாணாக்கர்

க. காதிறுமுகியித்தீன் சாகிபு அவர்கள் பார்வையில்

நாகை, நீலலோசனி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1918.

97:417
N18

பிஸ்மில்லா ஹிர் றஹீமா னிர் றஹீம்.

25 OCT

கீர்த்தனமஞ்சரி.

இஃது

நாகூர் யூ சின்னத்தம்பி மரைக்காயரவர்கள் குமாரரும்,

செந்தமிழ்பாநு

திருமயிலை ஸ்ரீமான் பா. முனிஸ்வாமிப்

பாவலரவர்கள் மாணாக்கருமாகிய

யூ சி. பக்கீர் மஸ்தான் அவர்களால், இயற்றப்பட்டது.

நாகூர் கனதனவான் ஸ்ரீமத் வா. சிந்தாமதாருசாகிபு அவர்கள்

பொருளுதவியால்,

நாகூர் வா. குலாம்காதிறு நாவலர் மாணாக்கர்

ஸ்ரீமத் க. காதிறு மூகியித்தீன் சாகிபு

அவர்கள் பார்வையில்

நாகை, நீலலோசனி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1918.

இந்நூல் அச்சிட்ட கனவான் இன்னாரெனப்பாடியது.

சிந்தாத வாழ்வுஞ் சிறப்புங் தகுதியுஞ்சேர்
சிந்தாம தாருசாகிப் சீமானன்—சொந்த
அருநிதியா லிந்நூலை யச்சியற்றிப் பாரிற்
பெருமை பெறச்செய்தான்—பேண்.

——()——

இஃது

இந்நூல் அச்சிடுவித்த கனவானாகிய மகா-ளா-ஸ்ரீ ராஜபூஜிதபிரபு

வா. சிந்தாமதாரு சாகிபு அவர்கள் பேரில்

பஞ்சாத்திர வெண்பாக்கள்.

ஓதுவார்க் குற்ற வுணவு முசிதமற்ற
ஆதுலர்க் கில்லிடமு மத்துவமாய் வாதனமுந்
தந்துதவி யாதரிக்குந் தார்வேந்த னிப்புவியில்
சிந்தா மதாரோன்போந் தேர்ந்து

அன்ன மிடுவோ னயலாரை யாதரிப்போன்
வன்ன தமிழ் நாவலர்க்கு மற்றையர்க்கும் பென்னம்
பெரிதார்ந் துபகரிக்கும் பேற்றியுளோன் யாரு
மரிதிவன் போலுல கத்து

சாதுக் குயர்நண்பன் சன்மான மிக்குள்ளோன்
மாதுக் கினியநறு மாரனிவன்—பாதுக்குச்
சிந்தா மணியன்னச் செல்வன் செருக்கற்றேன்
சிந்தா மதாரோனவே செப்பு

காக்குங் கிருபை கடவுட் டிருவருளும்
பூக்கும் பொழிலுசூர்ப் பூமான்றன் நோக்கு
முரியதவ சற்புருட னென்னியசீர் ஞான்று
மரியலுத மாலைபுயத் தான்

வந்தாரைத் தாபரிக்கும் வள்ள னிகாற்ற
சந்தானக் கற்பகக்கை சாபல்யன் சிந்தா
மதாரோன்னுந் செல்வ மகிபன் புகழு
முதாரிதுணை முள்ளோனென் றோது.

18027

இரங்கூன் வித்வாபிமான சங்கத்தின் காரிய நிர்வாகரும்
ஸ்ரீ சிவநேச திருக்கூட்டத்தின் அக்ராஸனாதிபதியுமாகிய
செந்தமிழ்பாநு.
திருமயிலை ஸ்ரீமத் பா. முனிஸ்வாமிப்பாவலரவர்கள்கூறிய

சிறப்புப்பாயிரம்.

ஆசிரியப்பா.

பாருட் சிறந்து பலவளங் கொழிக்குஞ்
சீருட் பொருந்தி திரையெடுத் தெறியும்
புனலின் பெருக்கும் புயலின் பெருக்கு
மனந்துயில் கின்ற வணிமரை யிருக்கும்
பலதடஞ் சூழும் பழனப் பெரும்பதி
பலவின் சாறுகள் பாயவ ளர்ந்து
பயன்மூ நான்கெனப் பயக்கு முயர்தல
மயற்புற மருங்கி லணிகோ புரங்க
ளழகிய மாடமு மாதுலர் தமக்கு
வழங்கிடு தான மடங்களு நல்லா
ருள்ளத் தமர்ந்திடு முயராண் டவர்தம்
பள்ளி வாயிற் பலப்பல விளங்கு
மன்னவர் திகழ்ந்த மண்டபஞ் சூழ்ந்த
பன்னரு நாகூர் பதியினின் வாசன்
நம்பினர் தமக்கு நல்குஞ் சின்னத்
தம்பிமரைக்காயர் தவத்தினில் வந்தான்
முனிவிலா னன்பு முதிர்வுளான் கற்குங்
கனிவுளான் பத்திக் கரையிலான் வித்தை
யறிவுளான் நெஞ்ச மலைவிலான் நின்ற
நெறியுளான் நேச நிலையுளான் யார்க்கும்
மொழியுப சார முகத்தினுங் காண
வழிபடுங் குணத்தான் வரம்புநீ ருலகில்
வேண்டிய நலங்கள் விரும்புவார் பெறவெனி
லாண்டவற் றொழுதே யடைதலும் வழக்கா
லவன்பதம் பாடி யன்புடன் றொழுது
தவத்தினர் தம்மின் றனியரு ளுறவும்
பவக்கடல் கடக்கும் பான்மைத் தாக
நவரசம் பொதிந்த நல்லகீ தங்கள்
சேர்த்திசைத் தினிய செவிக்கமு தாக்கிக்
கீர்த்தன மஞ்சரி கிழமைப் பெயர்த்தால்
தக்கவர் போற்றிடத் தந்தான்
பக்கீர் மஸ்தான் பாவல் லோனே.

18021

பிஸ்மில்லாஹி.

சாத்துக்கவிகள்.

நாகூர் ஸ்ரீலஸ்ரீ மு. ஆ. முஹியித்தீன் அப்துல் காதிறுப் புலவர் அவர்களால் இயற்றிய

விருத்தம்.

தானாகித் தனியாகித் தனக்குநிகர் தானாய்ப்பற் சமயமாகி
நானாகி நீயாகி நடுவாகி வடிவாகி நாதமாகி
ஊனாகி யுணவாகி யுடலாகி யுயிராகி யுதிப்புமாகிக்
கோனாகிப் பலபேதமா, யுண்மின் குதாவினிய நாதராகி.

அருட்கிடக்கு மறுசேறி வருமிறசூல் முகம்மதனா ரருந்தாளிற்கும்
தெருட்கிடக்கு மெய்ஞ்ஞான சூக்குமத்திற் றோய்ந்துலகு திரிபற்றுற்ற
விருட்கிடக்குங் கொடுந்துடக்கா ணவமகற்றி யில்லறமு மியமமொன் [றாய்ப்
பொருட்கிடக்குந் தவசரிமைபுரிந்தகுத்தா பொலிகடிரு பூந்தாளிற்கும்.

நேராய்ந்த சற்குணவிற் பனன்றகுதி நியமநிலை குன்றாயூகன்
சீராய்ந்த கொடைக்கரத்தான் கல்வியொடு கேள்விபல தெரிந்தநீரான்
பாராய்ந்த சின்னத்தம்பி மரைக்காயர் பாலகனென்றிகழ் நாகூரான்
ஆராய்ந்த ஸ்தனமடவார் மடலெழுதி முடியாத வழகின்மிக்கான்.

கண்பூத்தகருணையினாற் சற்றுரை யாதரிக்குங் கவலையுள்ளான்
ஒண்பூத்தமுன்னூலை யுணர்ந்தொழுகுமாண் புளத்திலுறங்குந்திவ்யன்
பண்பூத்த மெய்ம்மொழியன் பக்கீர்மஸ்தான் கவிஞன்பல்லோர்மெய்க்க
விண்பூத்தகீர்த்தனை மஞ்சரியெனுமோர் நூலியற்றிவெளிக்கிட்டானே

இரங்கூன் வித்வாபிமான சங்கத்து அக்ராசனாதிபதி
வித்தாரகவிப்புலவர்
ஸ்ரீமான் புரசை வி. எ. சிங்காரவேலுப்பிள்ளையவர்கள்

கூறியது.

அறுசீராசிரிய விருத்தம்

பாரிட்ட மாந்தரிடர் தவிர்நாகூர் ஆண்டவர்பொற் பதமிறைஞ்சித்
தாரிட்ட ஒலிநபிகண்மான்புலவு கீர்த்தனைமஞ் சரியா மோர்நூற்
சீரிட்ட சின்னதம்பிமரைக் காயன்றவத்தெழுந்த செஞ்சொன்னல்லான்
காரிட்டபக்கீர் மஸ்தான்கவி ஞன்மனங்கனிந்து கழறினனே.

நாகூர் மகா வித்வான் வா. குலாம்காதிறு நாவலரின்மாணக்கர்
தர்கா பிரசங்கி ஸ்ரீமத் க. காதிறு முகியித்தீன் சாயபு
அவர்களால் இயற்றிய

கோச்சகக்கலிப்பா.

மருட்காட்டுங் குபிரினத்தை மாற்றுமிஸ் லாத்தி
னருட்காட்டு நமதிறசூ லரியமலர்த் தாண்மீதுந்
தெருட்காட்டூர் திருநாகைத் திவ்யபெரு மான்மீதும்
பொருட்காட்டுங் கீர்த்தன மஞ்சரியினைப் புனைந்தான்.

சீரோங்குஞ் செல்வீகஞ் சிறந்தோங்கு நாகூரிற்
பேரோங்கும் வர்த்தகத்திற் பிரபல்ய மிகுத்தோங்கித்
தாரோங்கும் புயசின்ன தம்பிமரைக் காயர்சுதன்
நேரோங் குளத்தமைத்து நீணிலத்தே நிகழ்த்தினன்.

இக்கணத்தும் பொருந்துறு திருக்கும்பதப் பாவினத்தைத்
திக்கனைத்துங் கொண்டாடித் தினந்தோறு நவிலவே
தக்கபுகழ் வர்த்தகத்திற் றனக்குநிகர் தானிலான்
பக்கிருமஸ்தான் கவிஞன் பாருலகிற் பரப்பினன்.

திருமலைராயன்பட்டணம்
ஸ்ரீமத் அ. முகியித்தீன்பாவா அவர்களியற்றிய,

ஆசிரியவிருத்தம்.

பருவமருவாவரிய வொருவனருளுறுந் திவ்ய
பன்னூலுணர்ந்த யூகன்
பாக்யதன யோக்யமுறுஞ் சிந்தாமதானுதன்
பாசவிசுவாச யோகன்
குருமீது சிந்தைமறவாது முறைவழுவாமற்
கொண்டாடு மோனதாகன்
குவலயம் போற்றுமிரு குத்துபுசாஹில்ஹமீது
கொழுந்தாளிறைஞ்சும் வாகன்
திருவணிஞ்செறியுமியல் வாரிபுடை சூழுநற்
சீர்நாகை நகரின் வாசன்
திதிசின்னத் தம்பிமரைக்கார்தந்த சேயெற்குச்
செப்புதற் குரிய நேயன்
அருமையுறும் பக்கீர்மஸ்தான் கவிஞன்சங்கீத
வணியிசைகெடா தினிமையாப்
அழகுட னியற்றிய கீர்த்தன மஞ்சரின்
அதிமகிமையே மகிமையே.

இரங்கூன் ஸேண்ட் அந்தோனீஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந் பி. வீ. இராமதாஸ நாவலரவர்கள் கூறிய

பன்னிரு சீர்விருத்தம்.

பூக்கடொறு நறவமுணுந் தேன்பாடுந் தென்னுகை பொலிவுற் றோங்கு
புண்ணியசின் னதம்பி மரைக்காயர் தவஙீடிப் புவியின் வந்தோன்
பாக்களியல் வழுவாது கற்பனைகள் வைத்தடுக்கும் பான்மை யோன்சீர்
பராங்குச நாவலர்தம் பாலுணர்ந்து பொறையடக்கம் படிந்த நல்லான்
வாக்குநயந் திகழ்பக்கீர் மஸ்தான்நல் லபிதானன் வண்மையாக
வைத்துமனத் தெவ்வெவருங் கீர்த்தனு மஞ்சரியை மதிக்க ஒளஸி
யாக்கணபி மார்கண்மிசை துதியாக நவின்றனனிந் நன்னூற் சொன்ன
யாவருநா மணக்கவுள மணக்கவிக பரசுகத்தை யடைவார் மன்னோ.

இரங்கோன் பலசரக்கு வியாபாரம் நாகூர் வித்துவான். ஸ்ரீமாந் M. K. முகம்மதலி மரைக்காயர் அவர்கள்கூறிய

வெண்பா.

பக்கீர்மஸ்தான்புலவன் பாடியகீர்த்தனத்தைப்
பக்குவமாய்ப் பாடிப் பணிவோர்கள்—துக்கமெலா
நீங்கிச் சுகம்பெறுவார் நீணிலமேற் செல்வங்க
டாங்கி வரம் பெறுவர் தான்.

தஞ்சை ஜவுளிவியாபாரம் வித்துவான் ஸ்ரீமாந் M. முகம்மதுஸ்மைல் ராவுத்தர் அவர்கள்கூறிய

வெண்பா.

ஆண்டவரைப்பாட வழகான கீர்த்தனங்கள்
வேண்டுமவர்க்கருண் மேவிடவே—ஈண்டமைத்த
பக்கீர்மஸ் தான்கவிக்குப் பாரோரென் கைம்மாறு
தக்கதெனச் செய்யவலார் சாற்று

திரிசிரபுரம் மஹாவித்துவான்
ஸ்ரீமத் சண்முகநாத தேசிகரவர்கள்
திருவாய்மலர்ந்தருளிய

கட்டளைக்கலித்துறை

பரவுதற் கான நபிநா யகங்கட் பதமலர்க்கும்
பெருந்தகை யாமொலி யுல்லாக் களிற்செம் பிறையடிக்கும்
வரந்தரும் ஆண்டவர்க் கும்புகழ் கீர்த்தன மஞ்சரியை
யுரிமையிற் றந்தனன் பக்கீர்மஸ் தானென னு முத்தமனே.

சென்னை ஜோதிடாரூடகணிதவல்லுநர் ஸ்ரீமாந்
ஆ. நயனப்பப்பண்டிதரவர்கள் சிரேஷ்ட புதல்வரும்; திருநெல்வேலி
சுப்ரமண்யபுரம் மஹாவித்வசிகாமணி ஸ்ரீலஸ்ரீ
P. ஜோசேப்பு நாடாரவர்கள் பிரதமமாணாக்கரும், இரங்கூன்
வித்வாபிமான சங்கத்தின் உப அக்ராஸநாதிபதியுமான
ஸ்ரீமாந் கபாலமூர்த்திப்பிள்ளை அவர்கள் கூறிய

பன்னிரிச்சீர்விருத்தம்.

பாரண்டம் பலதந்தான் பகலிரவும் பகுத்தமைத்தான் பரம னென்றும்
பரவியமன் னுயிர்கடமின் குறைநீக்கிக் கருணையுடன் பாதுகாக்க
யாரதற்குக் கைம்மாறு புரியவலா ரெதுபுரிவா ரெனவுள் ளெண்ணி
யிறையவன்ற னிணையடியை வாயார வாழ்த்துவதே யினிதென் [றோர்ந்துப்
பேருலவு நாகூர் சின்னத்தம்பி மரைக்காயர் பீணைத்த நோன்பாற்
பெரிதுவந்து கலையுணர்ந்த பக்கீர்மஸ்தான்புலவன் பிறரும் போற் [றுஞ்
சீரமைந்த கீர்த்தன மஞ்சரியென் றொருநூலைத் தெளிந்த வாக்கால்
திகழ்நபியாண் டவரொலியுல் லாக்களுக்கோ ரணிதுதியாய்ச் செய் [தான்மாதே

வெண்பா.

பார்த்தேன் முழுவதினும் பக்கீர்மஸ்தான் சொன்ன
கீர்த்தன மஞ்சரியைக் கேட்டதினல்—கீர்த்தனங்கள்
நல்ல வளமுளது நம்முடைய ஆண்டவர்மேற்
சொல்லுந் துதிமிகுந்த து

இரங்கூன் வித்வாபிமான சங்கத்தின் காரியதரிசியும்,
இரங்கூன் ஆனரேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டு இன்டர்
பிரிட்டருமாகிய வித்வான்

ஸ்ரீ கோ. கல்யாணசுந்தரம் பிள்ளையவர்கள் கூறிய

வேண்பா.

பக்கிர்மஸ் தான்கவியைப் பத்தியுடன் பாடுவோ
ரெக்குறையுந் தீர்ந்துசுக மெய்துவார்—மிக்கசுவை
கீர்த்தன மஞ்சரியின் கீதங் தனக்கொருநூல்
சேர்த்தெனறு சொல்லு நினைத்து.

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

ஆண்டவர் நபிநாயகம் ஒலிகண்மீது பாடிய

கீர்த்தனா மஞ்சரி.

காப்பு வெண்பா.

உலகெல்லா மேத்து முயர்வுற்ற நாதன்
நலமிக்க திவ்ய நபிமா—ரொலிகட்கும்
மன்னுதமிழ் கீர்த்தனா மஞ்சரியைச் சொல்லபர
மென்னுளத்தி னின்றருளு மே.

நூல்.

பதினான்கு சீர் விருத்தம்.

தந்தையா ரென்றனைத் தரணிமீ திற்பெறத்
தவம்புரிந் திட்ட முறையோ
தாயவளின் வயிற்றிலே தங்கியுரு வாகுநாள்
தமியன்கரு வுற்ற நெறியோ
சந்ததமு முண்மையைச் சிந்தையினி லெண்ணி நின்
றன்னைபணி யாத குறையோ
சற்குணமொன் றில்லாமற் கசடர்க டம்முடன்
சார்ந்துறவு கொண்ட சதியோ
புந்தியினிற் சந்ததஞ் சிந்தையுடன் விந்தைசேர்
புகழ்பாடிக் கொண்ட திலையோ
பூரணா பூவுலகிற் பொருந்துமெவ் வுயிர்க்கெலாம்
பூபதி யான வருளே
அந்தரத் தவருலகி னோரறிய வியலாத
வற்புத விநோத பொருளே
அடியனுக் குனையல்லால் துணையாருங் கண்டிலே
னருட்செய்வதுன் பாரமே,

கோச்சகக் கலிப்பா.

முன்னாண் முடிந்த திருமுடியே முடியாகும்
இன்னாளதை மறுக்க வியன்றவழி யின்றேயாம்
பன்னாட்படு மிடியைப் பற்றறவே போக்கியருள்
என்னாலே யாவதில்லை யிறையுன் னடைக்கலமே.

கீர்த்தனம்.

இராகம் தோடி. மிசுர தாளம்

பல்லவி,

என்னாலாவ தொன்றில்லை—இறையே நினையல்லாது
எதுஞ்செய் திட வறியேன்.

அநுபல்லவி.

அன்னை தந்தையு முன்னா லாக்கிய தவந்தானோ
ஆதரவற்றவெனை யலையச் செய்வதுமேனோ.

சரணங்கள்,

(1) பொன்னாருஞ் செம்மணபி நட்புறச் செய்திடுவாய்ப்
புந்தி மகிழத்திரு வேதமந்தத் தெளிவாய்ப்
பன்னாட் படுந்துயர மிந்நா ளகலச் செய்வாய்ப்
பாரினின தடியேன் நேரின்மொழி கீதியாய் (என்)

(2) பெற்றாருடனே பெண்டீர் பிள்ளை யிருந்து மென்ன
பேர்பெற் றோங்கிய செல்வம் பிரபல்ய மானாலென்ன
கற்றறிந் தோர்தமக்குக் காட்சிபுரியு மன்னாக்
கயவன் கசடகற்றிக் கருணைபுரியா தென்னா? (என்)

(3) உருவ மருவமற்ற வுடையோனினையே தேடி
யூகித் தறியா குற்றம் மன்னித் தருள்வாய் நாடித்
தருணங் கவலையொழித் தன்புட னெனைக் கூடி
தயை புரிவாய் மஸ்தான் கலிமா வோதிட பாடி (என்)

தரகு கோச்சகக்கலிப்பா,

சொல்ல வியலாய் பலவாய்ச் சூட்சமதிற் சூட்சமதாய்
நல்லவித மாயமைத்தே நன்னீதி செய்புமொரு
வல்லபெரி யோனரிய வாய்மைநிலை குன்றுதோன்
அல்லாஃ ஒருவனையே யஞ்சிபணி வாய்மனமே. (அல்)

(நல்ல மருமகள் கொண்டுவந்தானடி என்ற மெட்டு.)

இராகம்-முகாரி-தாளம்-ஜம்பை

பல்லவி.

அல்லாஃ ஒருவனையே நீ வணங்கிக்கொள்ளுவாய்
அருளாநந்தம் பெற (அல்)

அநுபல்லவி.

இல்லா ளுறவுடன் சல்லாபமாகவே
ஏந்தல் நபிமொழி தன்வழி யாகவே
கல்லு நிலைகலி மாமுக மாகவே
காத லுடனென்றும் பூதல மீதரும்

சரணங்கள்.

(1) அஞ்சாறறிந்தான்றன் நெஞ்சில் நினைவுடனே—ஆதி முன்னவன்
ஆஷக்காய் நின்றமல் நேசமதாயுடனே
வஞ்சக மாய்கை பொய் வந்தணுகா துடனே—வாசிமீதேறியே
வாழ்புவிமீதருந் தீன்கலி மாதிடனே
அஞ்சலென்றண்ணல் நபியருள் பெற்றன்பால்
அம்புவிமீதமல் செய்முறையையும்பால்
சஞ்சீவியா யரும் மஷாயிகு தன்னின்பால்
சார்ந்தடி போற்றிக் கைதேர்ந்துணர்வாய் நன்பால் (அல்)

(2) காலை முதல் வேளையஞ்சுந் தொழுதுகொள்ளுவாய்-ஹக்குல் பெக்கி
காரண வேதத்தைக் கண்டு தெரிந்து கொள்ளுவாய் [னென்றக்
மாலைவிழித்தமு றுக்கபா தன்னினைவாய்—மற்றொன்றை யெண்ணுத
முஷாஹிதா செய்தமல் திக்கிரை முன் தெளிவாய்க்
கோலமுடன் நபுசு அம்மாறுவை விட்டுக்
கொஞ்சங் கொஞ்சமாக லெவ்வாமாவைத் தொட்டு
முல்ஹிமாவிற் சென்று முதுறிவை நட்டு
முக்மயினு தன்னில் மோட்ச வழிக்கேட்டு (அல்)

(3) கற்றறிவாரும் புத்தியைத்தானுணர்ந்து—காஷினிமீதுநீ
காமிலென்னுஞ் செய்கை நேமமுடன் பணிந்து
உற்றறிவார் முத்தி சித்திபெறத் தெரிந்து—ஹூகித்ததின்படி
ஒவ்வொருபடியாகவே நீ கடந்து
பற்றியே தவ்ஹீதைப் பண்புபராகவே
பக்திகனில் முங்கிச்சித்தமெய்யாகவே
குற்றக்குறை யொழிந்தேபோய் யேகவே
கூறு மஸ்தான் துதி நேர்வழியாகவே (அல்)

கலித்துறை.

நிறையே பெருந்தவத்தார் பலர்மிக்க நிலைதருகும்
மறையே பெரிதெனக்கொள் பகர்சீருள மாண்புடையோர்
முறையே சுகூதுசெய் மெய்ஞ்ஞானகாட்சி முடிபுணர்ந்தார்
இறையே கதியிறையே யெற்கருள்க வென்றேத்துவரே.

இராகம் (சுவாமியே இன்னம் ஜாலம் என்ற மெட்டு)

இராகம் சமாஜா தாளம்-ஆதி,

பல்லவி.

இறையே யெற்கு முறையே வருங்
குறைகள் தீர்த்தருள் (இ)

அநுபல்லவி

துறையே திருதூயா தூதர் நபிநேயா
மறையாலுரை நிறையா லரும்பொறையா லருள்வாய்

சரணங்கள்.

(1) தன்னையுணர்ந்தவர்க டம்மனத்துறைவோனே
மன்னனே யருங்கோனே மாதவத்தோர்க்கானே
இன்னமென்மேல் வன்மஞ் செய்யாதென்றுந் திண்ணம் (இ)

(2) சஞ்சலத் தாலே வாடி தவிக்கின்றேனோ நேடி
வஞ்சியினாசை நோய் மிஞ்சிய மையல்தீராய்
நெஞ்சிற் பஞ்சைக் கெஞ்சும் வஞ்சங் கொஞ்சந் தீரவே (இ)

(3) உருப வருப மில்லாக் கருணை புரியும் வல்லா
வறுமை மிடிபொல்லா வஞ்சனையற மேலா
மன்னுமதி தன்னால் மஸ்தான் பன்னுண் மகிழவே (இறை)

எழுசீர் விருத்தம்.

மதிதவழுந் திருமதினு நிதிபெறுகு மதிபதியாய்
மகுடமுடி பெற்ற நபியே
துதிதவழு நறைகமழு மக்கநக ரப்துல்லா
தோன்றற் றவத்தான நபியே
ததியுமது கழலைகதி யென்றடியேன் போற்றினேன்
தாரணி மீதி லென்றும்
கதிருலவு பூரணங் கருணைமிகுந் தாயகாக்
கடையனைக் காத்தாள் வாயே.

தரகுக்கோச்சகம்

சோதிமயில் கிந்திலாய் துலங்குமவு னச்சுடராய்
நீதிமஹூ மூதொளியாய் நிராமயத்தின் பொக்கிஷமாய்
ஓதிமதி னையமழைத்தோ ரொப்புவமை யற்றவொரு
ஆதியிறை யோனபியே யாதரித்தாள் வீர்கடனே.

இராகம் (ஆரென்று மிரட்டுகிறீர் சுவாமி என்ற மெட்டு)

கமாஜு தாளம் ஆதிசாப்பு

பல்லவி.

ஆதியிறைநபி சோதி மலரடியே—தினம்
அண்டி பணிகுவாய் தஞ்சம் பெறவே நாடி. (ஆதி)

அநுபல்லவி.

நீதிமறை போதகராய்ப் பூதல மீதிலென்றும்
வேதகுரு முச்சுடரிற் காதலாய் வந்தீர்—திருப்
பாத பங்கயமதைத் தீதகல தந்தருளும்
பேதை மனமகிழ்ந்து மாதுபயலறவே (ஆதி)

சரணங்கள்.

(1) ஆதிமன் னீதியென அப்துல்லாமுன் செய்தவத்தால்
அருஞ்சுதனாக வந்த ஆரணரே—உயர்
அந்தமிகும் ஆமினம்மாள் சிந்தையுறப் பெற்றெடுத்த
அண்ணல் முகம்ம தென்னுங் காரணரே
வாதுசெய் இபுலீசுவின் சூதுவலை தன்னைவிட்டு
வல்லோ னருட்பெறச்செய் பூரணரே
மாநில மீதிலேமன் வந்துயிரை வாங்கும்போது
மகிழ கலிமாவில் கழறும் படிக்குதவி (ஆதி)

(2) நபுஸாவும் மாருவெளில் நடனம் புரிந்திட்டிச்சை
நாசமதை யூட்டி றெப்பினிஸ்டம் போக்குதே—நான்
நற்றவம் புரிந்திடவே லெவ்வாமா முல்கிமாவும்
நவிலுமுறைவழுகா வெண்ணமாகுதே
கபுருநற் ரஹிமே தேடுங் காதல்முத் மயின்ஞவெனுங்
கருணைநிலைபெறவே காசினிமீதே
சபீஉல் முஜூநபியின் சாரும்படிக் கருள்வீர்
தத்வ பரிபூரண ரத்தின சிகாமணியே (ஆதி)

(3) திமிஸ்க்கர சனிந்துவந் துலாவ வேண்டிச்சனம்
சொந்தமுடனே யழைத்து சிந்தை தெளிந்து—மிக
நம்பிமறை நபியெனத் தம்பிரா னுறைத்தபடி
நாடியே கலிமா சொல்லி தீனிலழைத்து
ஈமானிசுலாமுதல் நேம தொழுகை நோன்பு
ஈகை சக்காத்து ஹச்சி தன்னை யளித்து
கோமானருள் நிறைந்த குறைஷி வழியின் தூதா
போமா துபாணைத்தும் சீமானுதவி யென்றும் (ஆதி)

(4) கானிற் புனலழைத்து மானின் பிணையகற்றிக்
கண்டு வேடன் விண்டு கலிமாவை யுரைத்தீர்—உயர்
ஹாசிம் வரம்பி லெழில் யாசின் முஸ்தபா வேசெல்வி
கதிஜா கனவிலுற மணம் புரிந்தீர்
தீனுக்குயிராய்வந்து திருமதி ஞவி லென்றுந்
திகழ்மதி யாகவந்து மகிழச் செய்தீர்
தீயபாவி கொடுநோய் நையும்படி யகற்றித்
திருக்கலி மாவை நாவில் தினமும் பெறவே யேழை (ஆதி)

(5) தந்தை தாய் செய் பலனோ சிந்தைமகி மீதிலென்றுஞ்
சந்தோஷம் பெறுமற் பாவி யானதுபோலே—முன்
சற்றேனு மறிவில்லா சுற்றறியாருடனே
சார்ந்துழ வாடினதால் வந்ததென்பாலே
எந்த விதத்திலென்னை சொந்தமதா யாண்டருள்வீர்
எமன் வருசமந்த வேளையில் நானே
எகனருள் பெறவே இஹ்சான் புரிவீரென்றும்
இப்புவிமீதில் மஸ்தான் செப்பு மொழிக்கிரங்கி (ஆதி)

கலித்துறை.

மேவுஞ் சிறப்புளப் பூமான் பவப்பிணி வீரழிக்கந்
தாவும் பரிசுளர் செல்வமும் ஞானத் தகுதியுஞ்சேர்
பூவும ஞேதயர் வித்தக மற்றும் புரக்கபணி
காவு செறிமதி நாமஹா மூதர்மெய் காரணரே.

இராகம் (அந்தரமுப் புவியும் என்ற மெட்டு)

தேசிக தோடி தாளம் ஆதி.

"தரு"

காவு சூழ் பதிஞவில் வாழு மஹமூதா—துய்ய
கருணை கழலைத் தந்து வறுமையகற்றுமுயர்வேதா—மிக
நாவலர் துதி மேவிடும்புகழ் நாயகமானவா
நற்றவம் புகழப்துல்லா பெற்ற தாயக மானவா
நாடி யென்மீது வாதுசெய்யாது தோடமுஞ்சூது நாடவொண்ணுது
நத்து மென்னை—பத்தியுடன்—முத்திபெற—நிதமருள் (காவு)

தேசமன்னவரெல்லாம் ஆசானென வணங்குகோனே—இப்போ
தேவரீருமதடியேன் காதலை நீக்கு மெஜமானே—தனி
நேசமதாய் ஹக்கின் வாசம்புகழ்பெற்ற தேசயரானமன்
ஹாசிம் வரம்பெறில் மாசிலாத மஹபூபுவானமுன்
தாசனை நாளும்—வாசகம்போலும்—காசினிமேலு—நேசம் வைத்தாளும்
சந்ததமும்—சிந்தையெழும்—பந்தமயல்—முந்தகல (காவு)

வண்டு செறிந்தேமது வுண்டுகளியு மக்க மாதா—உயர்
கண்டு மொழியா மிஞரீன்ற நவமணிகண்ணுதா—உமை
அண்டபுவனமுங் கண்டுபணிந்திடும் ஆரணகுருவே
ஆதியிட மொழி நீதியுணர்ந்த நற் பூரண வுருவே
தொண்டனெக்காலும்—வேண்டினன் தாளும்—ஆண்டகை நீரும் [ஆண்டருண்மேலும்
பண்டுவினை—சென்றகல—நின்றடியேன்—தொண்டுசெய் (கா)

அன்னை பிதா குரு மன்னுதி பொன் நீதி நபிநேயா—எற்கு
அஞ்ச லென்றருள்வ தெப்போவிஞ்சைமிகுத்த குருதுயா—முன்
கானிலொரு மான்வேடன்கை சிக்கிடக் கண்டுமேமீட்டுநீர்
ஹபீபரசுமுன் வேண்டிட மதியையக் கணமே யழைத்தீர்
அன்பர்கள் தேடும்—அருங்கழனிடு—மன்புடன்பாடும்—மஸ்தானைக்கூடும்
அகமகிழச்—சுகமுலவ—ஜெகம்புகழத்—தருஞ் கருணை (கா)

வெண்பா.

விந்தை யார் பாதம் விரும்பிப் பணிவோர்க்குச்
சந்ததமு மாண்பு தனையெழுப்புஞ்—சொந்த
சபீஉல் முதுனபீன் சாயுட்ச வேதர்
ஹபிபெ முஸ்த பாவே கதி.

இராகம் காபி தாளம் ஆதி.

(1) ஹபீபே முஸ்தபா மேறே ஹாஜத்தை கபூலாக்குவீரே
சபிவுல் முதுநபீ நீரே சாபல்யம் பெறச்செய்வீரே (ஹ)

(2) அறிவோர்க் கதிபதியாளா யரூபி ஆதியின் றூளா
ஆமினு ரீன்றமெய்பாலா அப்துல்லா தவத்தின் சிலா (ஹ)

(3) அல்லும் பகலும் பொல்லா அடியே னென்னையாள் வல்லாய்
சல்லூ அலாறரு வில்லா சருதாறே ஹபீபுல்லா (ஹ)

(4) வஞ்சியினாசையால் மிகுந்து சஞ்சலமாய்கையால் மெலிந்து
கெஞ்சியேகேட்டேனுமை யுகந்துகிருபைசெய்வாய் மனமகிழ்ந்து

(5) இப்புவிமீதுமை நாடி ஹப்புயர் மொழியாற் பாடி
செப்பிடு மஸ்தான் வினையோடி செய்யது முகம்மதேநாடி (ஹ)

இன்னிசை

தேரும் பொருள் வாய்க்க தினந்தினமும் பல்லோர்கட்
கூருந் திருநாகூர் கோமான் ஹமிதொலியே
வாரு மடியேனெற்கு வள்ளலே நன்குணர்ந்து
தாருமிந்த வேளைநலத்தா மறைத்தாள் தாரீரே.

(ஆதாரம் வேறேதையா என்ற மெட்டு)

இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி சாப்பு

பல்லவி

தாருமிந்த வேளையே தருணமுயர் தாளையே (தா)

ஆநுபல்லவி.

வறுமை யகற்றிதிருக் கலிமா கலையைக் குரு—ரீரீரீ
சிறியேன் பெறவேதந்து திருவருட் செய்யுவந்து (தா)

சரணம்.

மாணிக்கப்பூர் அதிகாரா
மருபாணி சூழ் நாகை யூரா
மன்னரசன் குத்தூஸ் குமாரா
மாமய லகற்றி யுபகாரா
எனிலாழ்ந்திடும் இடையூறெல்லாம் நீக்கிடும்
என்னுளொளி யாக்கிடும் இறையே முகம் நோக்கிடும்
மன்னுதி மன்னரெல்லா மாசாளென வணங்கும் ரீரீரீ
மாநில மீதிலரும் பூமானுலி யேநினைந்து (தா)

(2) வாடி மையலாகி புவிமீதில்
வஞ்சியவ ளாசையதன் பேரில்
வாதுசெய் இபுலிசுட போரில்
வகையறியா சிக்கியவென் னேரில்
உபகாரமாயுதவி புரி தீரமாய்
உள்ளுங் கலை ஞானமாயோது நிலை சாரமாய்
தவியாம லனுதினந் தாரணிமீதிலென்றும் ரீரீரீ
தமியேன் துயரறவே ஷாஹூல் ஹமீதொலியே (பாடு)

(3) அன்னைபிதா குருவு நீரே
ஆதரி தானுமென்றன் பீரே
பன்னாட் படுந்துயர கேரே
பற்றறவே புறம்பாகுமாறே

ததிவாருமே வறுமை மிடி தீருமே
வாழிபுவி மீதுமே வாசந்தர நாளுமே
பாத்தியமாகபீவி பாத்திமா யீன்றமணி—நீரீ
பாடும் மஸ்தன்கவி போலுஞ் சுகம் பெறவே

கலித்துறை

புலியே சறகின் கடலே மணிமணிப் பொக்கிஷவம்
புலியே புலவருங்கழற் போற்றும் புதினகுன்றே
கலியே யகற்றியருட் செய்யு நாகைக் கதிபதியே
ஒலியே யொலிபெருமா னேஹ மிதொலி நாயகமே

(நபியே நபியே நபிநாயகமே என்ற மெட்டு)

இராகம்—தேசிகதோடி அடை—தாளம்.

பல்லவி

ஒலியே ஒலியே ஒலி நாயகமே
கலி தீதறச்செய் நாகை தாயகமே—திரு ஒலி

சரணம்.

(1) வலியோன் றிரு நபி பேரணியானீர்
வள்ளல் ஹசன் குத்தூஸ் கண்மணி சுதனீர்
நலியெனி லனுகா வரத்தினை யருள்வீர்
நம்பினேன் ஷாஹமி தாண்டகையாபீர் (திரு)

(2) அஞ்சுடனாறு மறிந்திட வுலகில்
ஆதியை வணங்கிட வந்தருட் கனவிற்
சஞ்சலந் திரும் விதமருணினைவிற்
சாபல்யம் பெறக்குணஞ் செய்யுமித்தலியில் (திரு)

(3) இடையூ றகற்று மெம்பெரு மானே
இனியகவிமாலை யியம்பிடக்கோனே
கடைநா ளிடைவரு மிடியறத் தானே
கருணை புரிந்தருட் செய்யெஜ மானே (திரு)

சென்னை-600 008. 18071

(4) நெஞ்ச மதிலனு தினமுமை நினைத்தே
நேடிய படியுரைத் தேன்கவி படித்துக்
கெஞ்சியே கேட்கு மென்மிடி தொலைத்துக்
கிருபையாய் மஸ்தான் ஹாஜத்தாந் தீர்த்து (திரு)

கோச்சகம்.

அருணன் பணியுகிர ரற்றகபி யின்பேரே
வருண மலர்க்கதமே வாதகல தாரீரே
தருண மிது தருணம் சஞ்சிவியென் ஞயகமே
கருணை புரிவீரெம் ஹமீதப்துல் காதிறுவே.

இராகம் தோடி சுத்தம் ஆதிதாளம்
(பத்தியில்லா மதியே என்ற மெட்டு)

1. கருணை புரிவீ ரொலியே மனமுவந்து காக்ஷிபெறவே ததியே
கலிமா நிலையின் றுதியே கண்டறிந்து கசடறச் செய்யு மதியே
தருணஞ் சரணமையா பெருமானுதவி நீரே
தாரணி மீதிலுறும் வறுமை யகற்றுவீரே
தஞ்ச மென்றும்மை நம்பிய தாலே
சாபல்யம் பெறச்செய் வீரினிமேலே
ஷாஹுல் ஹமீதொலியே சாற்றியும் பாலே—ரீரீரீ
சார்ந்தடி பணிந்திடுந் தமியேனென்மேலே. (கரு)

2. வஞ்சக மாய்கை நிறைந்து அநுதினமும் நெஞ்சில் நினைவு குறைந்து
வஞ்சியினுசை மிகுந்து இபுலீசுட மாயவலையி லமிழ்ந்து
பஞ்சைப் பகலிரவாய்ப் பாரிற் படுந்துயரம்
பாரா திருந்திடாது காருமிது தருணம்
பத்திவழி யெழில் மூத்தொளி யானீர்
பற்றறி வாலுயர் பெற்றரு மதிசீர்
கஞ்சசவா யொலியே நெஞ்ச மிறங்கிவந்து—ரீரீரீ
கவலை யகற்றித்திருக் கலிமா தனைபுரிந்து. (கரு)

3. பச்சைக்கிராம்பையழைத்தீர் சன்யாசிதன்னைப் பாதரக்ஷயால்வதைத்தீர்
பசுவிற் குயிரைக்கொடுத்தீர் தின்பயிரைப் பக்ஷமுடனே விளைத்தீர்
இச்சை யகற்றிவாழும் பிச்சை சுகம் பெறவே
இஹ்சான் புரியவேண்டும் இகபரமான கோவே
இடைகடி மிடியற நடைகடை சுகம்பெற
வடிவுடை கொடைதனித் தடமுயர் திருநாகை
ரக்ஷக ராகவந்த ரத்தின சிகாமணியே—ரீரீரீ
மோக்ஷ வழியேயநு தினமும் பெறுவதற்கு (கரு)

4\. இத்தரைமீதி லடியேன் நம்பியதால் வந்தணுகாது மிடிதான்
பத்தியில்லாமதியேன் பாவந்தன்னைப் பற்றறச்செய்யா தறியேன்
குத்புல் மஜீதொலியே கோமானரு ணிறைந்தீர்
குறைவஷி குலக்கொழுந்தே இஹ்சான் புரிந்தருள்வீர்
காரண பூரண வாரண நாதா
சூரருந் தீரருந் தினந்தொழும் வேதா
முத்து முஹம்மதுர் றசூல்வழி தாதா—ரீரீரீ
மொழிந்திடுந் துதிமஸ்தான் மகிழ்ந்திட நீதா. (கரு)

கோச்சகக் கலிப்பா

பாணிக்கஞ் சோலைசெறிப் பண்புகுச்சு நாகூர்வாழ்
ஆணிக்கம் பூத்தொளிரு மரியமலர்ப் பொற்பாதங்
காணிக்கை யானவெனைக் காத்தருள்க நூங்கடனே
மாணிக்கப் பூர்பிறந்த மன்னர்ஹமீ துல்லாவே;

(இராகம் பைரவி. கும்மி. திருமுடைதாளம்.)

மாணிக்கப்பூர் ஹசன் குத்தூஸ் தவத்தெழு
மாதவ மெய்ஞ்ஞான மாமணியே
மன்றாடியே கொண்டாடினேன் சிறியன்மிடி சென்றோடிடு
மார்க்க மெனக்கருணாயகமே. (மாணி)

காவுசூழ் நாகையூர் தன்னி லமர்ந்திட்ட
காதிறுவி திரு நாயகமே
கர்த்தனருண் முத்திபெற வித்தருணஞ் சித்தம்புரி
கண்மணியான மெய் தாயகமே. (மாணி)

அய்யா வுலகினின் மைவிழி யாருட
மையவி லாகாது காமணியே
அதியேபதி நிதியேகதி ததியேதுதி வழியேமதி
அண்ணல் ஹமீதொலி நாயகமே. (மா)

அன்னை வயிற்றினி லற்புதஞ் செய்திட்ட
அப்துல் காதிரெனுஞ் சற்குணரே
மன்னுவரு மின்னுணமிடி தன்னுலற சொன்னேன் மொழி
மஸ்தான் துதிந்திடுந் தாயகமே. (மா)

விருத்தம்

காசினி யோர்களுடன் கற்றறிவுற்ற பெருங்
கவிராஜர் போற்றும் பதியாய்
மாசிலா வாழிபுடை கதிர்தவழு நாகூரிற்
மனம்பெருக வந்த பெருமான்
நேசவிசு வாசமுடன் தாசனுக் கனுதினமு
நேரிலுப காரவமுதாய்ப்
பாசமுடனுஞ் சித்தபரி பூரணஞ் ஜெயம்பெறுகப்
பரிந்து துணைசெய்வீ ரொலியே.

இன்னிசை.

தத்துவமும் ஞானத் தகுதியுள பூமான்கள்
நத்துந் திருநாகூர் நவமணியே மாமணியே
வித்துவமுஞ் செல்வம் விளங்கும் பெருமாள் பணியுங்
குத்துபுல் மஜீதப்துல் காதிரொலி சோமணியே.

(அந்தாமுப் புவியும் வந்து பணியும்)

தேசிகதோடி இராகம் ஆதாளம்

குத்புல் மஜீதே யப்துல் காதிறொலியே கவிநீராய்—ஹசன்
குத்தூஸ் தவத்திலெழும் புத்திர ரத்தினமே சீராய்—உயர்
முத்தொளி யாகவே இத்தல மீதினில் வித்தக ரானவா
மூமின்க் கதிபதி முஸ்தபா நபியின் வித்தொளி யானவா
எத்தனைகாலம் இத்தனைகோலம் எத்திடாதேக மெற்கனுகூலஞ்
செய்திடுவீர், மெய்திடனு? னுய்திடவே, யுன்னருளால் (குத்)

சஞ்சல மாய்கையம்பு நெஞ்சை வருத்துவதினாலே—நான்
மிஞ்சிய சஞ்சலத்தாற் கெஞ்சிபணிந்தேன் கவியாலே சதி
பஞ்சைக் கனுதினம் பாரிலுபகாரம் பாத்துஷா நீரையா
பாராதிருந்திடில் நேராகவந்தெனைக் காப்பது யாரையா
வஞ்சகந்தீரும், வந்தருள்தாரும், வாழ்புவிமீதும், வள்ளலேநீரும்
சஞ்சசவாய் காரணரே செஞ்சரணம் சீர்பெறுக. (குத்)

பச்சைக் கிராம்பழைந்து தச்சன் றுப ரகற்றினீரே—பாரிற்
பாவி படுந்துயரம் பாராதிருப்பதென்ன பீரே
இச்சைபகற்றியே யேகனருள்பெற வெம்பெரு மானொலியே
இத்தரைமீதினில் நற்றவஞ்செய்திட நித்தமருள் நிதியே
காசினிமீது நேசம்வையாது தாசனுக்கேது தங்களின்போது
கர்த்தருள் பற்றிடகை முத்திபெற சித்தமகிழ் (குத்)

சந்ததமு நுந்தனையே சிந்தையிலெண்ணிப் பணிந்தேனே—ஒலி
ஷாஹுல் ஹமீதொலியே பெந்தனையாளா பெம்மானே
எந்தி விதத்திலும் சொந்தமதாகவே யீன்றருள் நாதரே
ஏதேதறியாமல் குற்றங்கள் செய்திடில் மன்னித்து நீதரே
பந்தத்தைதிரும் பக்தியைத்தாரும் எந்தையேகீரும் என்முகம்பாரும்
பாடுமெஸ்தான் நாடிதினம் வாடிமனந் தேடியதால் (குத்)

இன்னிசை.

காரிருடியரே கமலமலர் தாள் விடுத்து
பாரி லழைத்து கலிமா பகரச் செய்தோரே
வாரீர் கனவி லென்முன் வந்து நல மேதழைக்கத்
தாரீ ருமதுகதஞ் சஞ்சலங்க ளோடிடவே.

இராகம் சந்துகாபி (யோகமுடைய நாகூர்) திரிபுடை தாளம்.

தாராய் ஒலிகள்பெரு மானே கழலினருள்
தாரா விடிலே துணை யார் யார் யார்—என்றும்
காரணு மெய் பூரணுதந்தி (தாராய்)

உய்யும் வழியிலெனக் கோர்துணை யாகவந்து
துய்யோ னருள்பெறவே செய் செய் செய்
துஞ்சியே மனங் கெஞ்சினேன் என்றும் (தாராய்)

நாகை நகரில் வாழும் ஷாஹுல் ஹமீதொலியே
நம்பு மடியனுக்கு நீர் நீர் நீர்
நாயகா திரு தாயகா சுரங் (தாராய்)

கஞ்ச சவாமியொலியே நெஞ்சு மிரங்கி யெற்கு
வஞ்சியி னுசையதைத் தீர் தீர் தீர்
வாடியே மஸ்தான் தேடிட மதி (தாராய்)

விருத்தம்.

பாரோரும் புகழ்நாகைக் கதிபதியே துரைநிதியே
பாவலர் போற்று மதியே
பேராரும் முத்திபெற சித்தமதி னுற்றபிணி
பெயர்ந்தோ டச்செய் தாளுவீர்
சீராருஞ் செம்மனபி செய்யவழி தன்னிலருஞ்
செய்பிதப்துல் காதி ரொலியே
நீராரும் புவிமீதி லடியேனுக் கெஜமானே
நினதுகழம் போற்றினே னே,

வெண்பா.

சஞ்சலங்கட் போக்கி தயையோ டெனையாள்கத்
தஞ்ச மெனவடைந்தேன் சற்குணரே—மஞ்சுங்
கருணைக்கடலே ஹமிதொலியே நாதா
தருணந்தரவரிய தாள்

இராகம் சங்கராபணம் (மோகலாகிரி யாகியே யுடல்) ஜம்பே தாளம்.

தருணமீதருந் தாளி னருள் தர
தாயக மாமெனுலியே தநி தீர்த்தருள் கலியே

கருணை புரிந்துறும் வறுமையகலச்செய் காதிரொலிநீரே—என்
கமல குகையினுட் கசடறுத் தாள்வீர் காமிலென்னும் பீரே
ஹக்கின் கதிபெறு மாறே ஹக்கின் கதிபெறு மாறே ஹக்கின் கதி
பெறு மாறே (தருண)

தீர்க்கரசாய்த் திருநீனுக் கதிபதி ஜெகதசற் குருவின்—உயர்
மார்க்க மதுவழி மன்னர் ஹமிதொலி மாணிக்கப் பூர்மதியே
மருபா ணிசூழ் பதியே மருபா ணிசூழ் பதியே மருபா ணிசூழ்
பதியே (தருண)

வேதமிரவு விடிமுன் னெழுதிய வேந்தர்க் கதிபதியே—எற்கும்
பூதலமீதுறும் வேதனை யேதுக்கள்தீதற செய்நதியே
பதிநாகை தயாநிதியே பதிநாகை தயாநிதியே பதிநாகை தயா
நிதியே (தருண)

நற்றவ மீதுற்றுங் கர்த்தனருள்பெற்ற நாயகமாமருவே—மூன்
பெற்றத் திற்குபி ரீன்றருள் செய்திட்ட பிரபல்ய மாகுருவே
போது தந்தருள் திருவே போது தந்தருள் திருவே போது தந்
தருள் திருவே (தருண)

தஞ்சமெனவரு மிஞ்சிய நோய்மிடி வஞ்சகம் போக்கிடும்போலிப்போ
கெஞ்சிடுமன்பனின் சஞ்சலம் போம்மாறுய்க் கஞ்சசவா யொலியே
செஞ்சொல் மஸ்தானின் றுதியே செஞ்சொல் மஸ்தானின் றுதி
யே செஞ்சொல் மஸ்தானின் றுதியே (தருண)

பதினான்கு சீர் விருத்தம்.

எந்தையே யுன்றனைத் தந்தையென் றெண்ணியே
யித்தல மீதி லடியேன்
எத்தனை கவிமிகப் பாடினுமென் றுயர் நீங்க
வேதுவழி செய்வேனினி யான்
வந்தனு காதுமிடி சொந்தமா யாண்டருள்வீர்
வள்ள லிறசூலின் வழியே
வரம்பிலெழிற் பரம்பொருளாய் வந்தரசாளு கின்ற
வாகுயர் தென்னாகை நிதியே
சிந்தைவழியே சென்று பலதீங்கு நண்ணியே
செய்வதறி யாத வேழை
செய்தகுறை போக்கியே திருவருடந்திந்த
சேயனைக் காக்க வேண்டும்
சந்ததநின்றனைச் சார்ந்தடி போற்றினேன்
சத்வசனு னந்த வொலியே
சமயமிது தமியனை யுமதுவிழி நோக்கியருள்
ஷாகுல் ஹமீது ஒலியே

ஆவணக்காப்பக
18021

கொச்சகம்.

கந்தமலர் சோலை செறிக் காருண்ய நாகூர்வாழ்
சந்ததமும் விந்தையுறுந் தருகா தயாநிதியே
சொந்த வறுமையெற்குத் துயர் நீக்கி நன்கருளத்
தந்தாள்வீர் செங்கமலத் தாள் ஷாகமிதொலியே.

ஜங்கலா ஆதிதாளம் சாப்பு பதம்

பல்லவி.

தந்தாள் ததிதிருத் தாளிறையே
தாரணி மேலக மகிழ்ந்திடும் படிஜெகம் புகழ் குருநாடி (தந்)

அனுபல்லவி.

1. வந்தேன் வதனமெய் சோர்ந்து வஞ்சியி னுசையால் நொந்து
சந்ததங் காத்தாளக மகிழ்ந்து ஷாகுல் ஹமீதொலி ததிவந்து (தந்)

2. சஞ்சல மாய்கையால்வாடி சார்ந்தடி பணிந்தே னுமைத்தேடி
வஞ்சகமெனி லனுகாக்கூடி வந்தருள் புரிவீரெனை நாடி (தந்)

3. நாகைக் கதிபதி நவநீத தாதா நம்பிய பேர்க்கருள் நற்றவ போதா
வாகூரசன் குத்தூஸ் கண்மணிபோதா வந்தருள் புரிந்திடு வீரிணிபாதா

4. உலகமதிலனு தினமுமை பணிவோர் ஒதிடும் நோய்மிடி படிமீதவர்நேர்க்
கலைதனிலுமபிழை தனைத்தறி பொறுப்பீர் கழறுமஸ் தான்மொழி கதி
[பெறத் துதிசேர் (தந்)

குறள் வெண்பா.

இந்த பணியு மிறையே சுமிதொலியே
வந்தாள் வறுமையற வே.

காபி பதம் ஆதிதாளம்

பல்லவி.

வந்தாள்வதெப்போ பெருமானே சகலருந்தொழு முயர்கோனே
செந்தாள் மலரினைத் தானே தந்தாளும் நாகை யெஜமானே (வந்)

மாணிக்கப்பூருதித் தோரே அசன்குத்தூஸ் சுதன் நீரே
சாணிககை யாகக்கொள்வீரே கயவனு யுயரகற்றுவீரே (வந்)

வரமதோய்ந்தே செழிநாதா வருலீமஹுதினை தர்தா
பரந்தா நீன் வழிவேதா பணிந்தேன்கா னவநீதா (வங்)

சஞ்சல மாய்கையால் வாடி தவிக்கிறேன் யானுனைத்தேடி
மிஞ்சிய மாலினையோடி கஞ்சசவாய் தகொடி (வங்)

சித்தநோ யெனிலாழாது கிர்தஞ்செருந்த னின்போது
நத்துமா தமரணுகாது நலிலுமஸதா னென்மீது (வங்)

சிந்தியல் வெண்பா.

கந்தமலர்ப் பாதக் கருணை நில கொழிக்க
விந்தை பெறு நாகூர் வேந்தரிடம்—சந்தோஷ
மாய் வருவாய் மாதே—மகிழ்.

இராகம் சேஞ்சுருட்டி பதம் ஆதிதாளம்.

சுந்தரமா பென்ற வர்ணமெட்டு,

பல்லவி.

சந்தோஷமாய் சகியே தருவாரடி (சந்தோ)

சந்தங் கமழ் பொற்பாதமே தந்தருளுவார் தினமே
உந்தன் வினைகள் தான் போமே ஒங்கு ஷாஹுமீது தாமே (சந்)

இந்து தவழும் பதியார் இலங்குர் நாகை நீதியார்
சுந்தரமான பொற்கையார் சுல்தான் ஹமீது மெய்யார் (சந்)

மாணிக்க நற்பூ ருதித்தோர் மாதர்ஸ்தன மீட்டிவைத்தோர்
காணிக்கை யாதவத்தோர் காதிரொலி மீராவெனன்போர் (சந்)

பொன்னகர்க் கதிபதியார்ப் புகழ்நபிதன் வழியார்
நண்பர் மஸ்த்தானின் றுணையார் நாயகம பாதது ஷாலிதியார் (சந்)